**இயல் 1**

**தொடர் இலக்கணம்**

**அறிமுகம்**

- ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் தொடர்ந்து வந்து, ஒரு தொடராக நின்று அது எவ்வகையான சொற்றொடர் என்பதை உணர்த்துவது தொடர் எனப்படும்.
- ஒரு தொடரானது எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகியவற்றைக் கொண்டு அமையும்.
- சில தொடரில் செயப்படுபொருள் இல்லாமலும் எழுவாய் இல்லாமலும் வரலாம்.

**எழுவாய்**

எழுவாய் பெயர்ச்சொல்லை அடிப்படையாகக் கொண்டு வரும்.

எடுத்துக்காட்டு : வந்தான்

**பயனிலை**

வினைச் சொல்லை அடிப்படையாகக் கொண்டு வரும்.

எடுத்துக்காட்டு : கனகாம்பரம் பூத்தது.

**செயப்படுபொருள்**

எழுவாய் ஒரு வினையை செய்ய அதற்கு அடிப்படையாய் தேர்ந்தெடுக்கப்பட்ட பொருளே செயப்படுபொருள். எடுத்துக்காட்டு : மீனா கனகாம்பரத்தைச் சூடினாள்.

**வகைகள்**

1.தோன்றா எழுவாய்

2.வினைப் பயனிலை

3.பெயர்ப் பயனிலை

4.வினாப் பயனிலை

**தோன்றா எழுவாய்**

எடுத்துக்காட்டு : படித்தாய் படித்தாய் என்ற பயனிலை மட்டுமே வந்துள்ளது. நீ என்னும் எழுவாய் வெளிப்படையாக தெரியவில்லை. இதை தோன்றா எழுவாய் என்கிறோம்.

**வினைப் பயனிலை**

எடுத்துக்காட்டு : நான் வந்தேன் வந்தேன் என்ற வினைமுற்று பயனிலையாக வந்துள்ளது.

VMHSSS

**பெயர்ப் பயனிலை**

**எடுத்துக்காட்டு : சொன்னவள் கலா**

**கலா என்ன பெயர்ச்சொல் பயனிலையாக வந்துள்ளது.**

**வினாப் பயனிலை எடுத்துக்காட்டு விளையாடுபவன் யார்?**

**யார்? என்னும் வினா பயனிலையாக வந்துள்ளது.**

**சில இடங்களில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் மூன்றும் இந்த இடத்தில்தான் வரவேண்டும் என்ற எந்த கட்டுப்பாடும் இல்லை.**

**எடுத்துக்காட்டு**

**நான் பாடத்தைப் படித்தேன்.**

**பாடத்தை நான் படித்தேன்.**

**படித்தேன் நான் பாடத்தை.**

**நான் படித்தேன் பாடத்தை.**

**பாடத்தைப் படித்தேன் நான்.**

**இவ்வாறாக ஒரு தொடர் மாறிமாறி அமைந்தாலும் பொருள் மாறுவதில்லை.**

VMHSSS